# GS - Indian History (வரலாறு) QA குஷாணப் பேரரசு (Cushion Empire) Notes

### குஷாணப் பேரரசு

இந்தியாவில் மௌரியர்களுக்குப்பின் நிறுவப்பட்ட வலிமையான பேரரசு குஷானப் பேரரசு ஆகும்.

இனம் - யூச்சி

ஊட்பிரிவு - குஷாணர்கள்

### முதலாம் காட்பிஸஸ்

குஷாண அரசை நிறுவியவர்

ஆண்டு - கி.பி.முதல் நூற்றாண்டு

### இரண்டாம் காட்பிஸஸ் (கி.பி. 65-75)

பஞ்சாபையும், கங்கைச் சமவெளியையும் கைப்பற்றினார்.

இவர் இரந்த பின் கனிஷ்கர் (கி.பி.78 -101 ) குஷான அரியணையைக் கைப்பற்றினார்.

### கனிஷ்கர் (கி.பி. 78-101)

குஷான வம்சத்தின் தலைசிறந்த மன்னர்.

சாகசத்திரபர்களை அடிபணிய வைத்தார்.

படையெடுப்பு - சீனா (2 முறை)

சீனத் தளபதி பஞ்சொ என்பவனிடம் தோல்வியுற்றார் (முதல் போர்)

இரண்டாவது போர் வெற்றி - யார்க்கண்ட், கோடான் இணைப்பு

புருஷபுரம் என்ற பெஷாவரை தலைநகராக ஆக்கினார்.

நான்காவது பௌத்த மாநாட்டைக் காஷ்மீரில் கூட்டினார்.

பௌத்த அறிஞர்களான வசுபந்து, அசுவகோயூர், நாகார்ஜூனர் போன்றோர் பங்கேற்றனர்.

மகாயான பௌத்த மதப்பிரிவு தோன்றியது.

இந்திய கிரேக்க நுட்பங்கள் இணைந்த காந்தாரக் கலையினால் புத்தர், பௌத்தத்துடன் தொடர்புடையோரின் புதிய சிற்பங்கள் உருவாக்கப்பட்டன.

பௌத்த மதத்தைப் பரப்ப அவர் மேற்கொண்ட முயற்சியால் "**இரண்டாம் அசோகர்** என்று அழைக்கப்பட்டார்.

கனிஷ்கர் பதவிக்கு வந்த ஆண்டினை முதன்மையாக வைத்துச் சகசகாப்தம் என்னும் புதிய காலக்கணக்கீட்டு முறை உருவாயிற்று.